செ.வெ.எண்.2/2018 நாள்: 2.01.2018.

**மறுவரையறை ஆணையம்**
**தமிழ்நாடு**

செய்தி வெளியீடு எண்.01/2018/ம.ஆ நாள் 02.01.2018

## செய்தி வெளியீடு

தமிழ்நாட்டிலுள்ள ஊரகம் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளான கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சிகளின் வரைவு வார்டுகள் மறுவரையறை கருத்துருக்கள் 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் பொதுமக்களின் பார்வைக்கு வெளியிடப்பட்டு வருகின்றன.

மேற்படி வரைவு மறுவரையறை கருத்துருக்களில் திருத்தங்கள், ஆட்சேபணைகள், கருத்துக்கள் ஏதும் இருப்பின் அது குறித்தான விண்ணப்பங்கள் 02.01.2018-க்குள் தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளின் வார்டு மறுவரையறை அதிகாரிக்கு (Delimitation Authority) விண்ணப்பிக்க கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தது.

மேற்படி கால அவகாசம் போதுமானதாக இல்லையென்று தெரிவித்து கூடுதல் கால அவகாசம் வழங்கக் கோரி அரசியல் கட்சிகள் மற்றும் பொது மக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கைகள் மறுவரையறை ஆணையத்தால் பரிசீலிக்கப்பட்டதை தொடர்ந்து வார்டு மறுவரையறை குறித்த ஆட்சேபனைகள்/ கருத்துக்களை அரசியல் கட்சிகள் மற்றும் பொது மக்கள் 05.01.2018 அன்று மாலை 05.00 மணிக்குள் தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளின் வார்டு மறுவரையறை அதிகாரிக்கு (Delimitation Authority) எழுத்து மூலமாக தெரிவிக்கலாம்.

அரசியல் கட்சிகள் மற்றும் பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட ஆட்சேபணைகள்/ கருத்துக்கள் குறித்து மறுவரையறை ஆணையத்தால் நடத்தப்படும் மண்டல வாரியான ஆலோசனைக் கூட்டத்தில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். அச்சமயம், ஆட்சேபணை அல்லது கருத்து தெரிவித்தவர்கள் நேரடியாக ஆய்வின்போது ஆஜராகி தங்களின் கோரிக்கையை எடுத்துரைக்கலாம்.

மண்டலம் வாரியாக நடத்தப்படும் மறுவரையறை ஆணையத்தின் ஆலோசனைக் கூட்டம் குறித்த விவரம் பின்னர் வெளியிடப்படும்.

T S [signature]
உறுப்பினர் - செயலர்
மறுவரையறை ஆணையம்

பா.பி
2/1/2018

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.